செ.வெ.எண்: 29 நாள்:23.03.2021

**கோயம்புத்தூர் மாவட்டம்**

**சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2021 -யை முன்னிட்டு ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிவாரியாக வாக்குச்சாவடி நிலைய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு கணினி மூலம் குலுக்கல் முறையில் பணி ஒதுக்கீடு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

கோயம்புத்தூர் மாவட்டத்தில் நடைபெறவுள்ள, சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2021-யை முன்னிட்டு, ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிவாரியாக வாக்குச்சாவடி நிலைய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு இன்று(23.03.2021)கணினி மூலம் குலுக்கல் முறையில் பணி ஒதுக்கீடு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது, மாநகர காவல் ஆணையர் திரு.சுமித்சரண் இ.கா.ப., மாநகர காவல் துணை ஆணையர் திரு.அர.அருளரசு இ.கா.ப, தேர்தல் பார்வையாளர்கள் (பொது) திரு.சீமாவியாஸ் இ.ஆ.ப., (பொள்ளாச்சி மற்றும் வால்பாறை), திரு.சௌரப்பகத் இ.ஆ.ப., (கோயம்புத்தூர் வடக்கு),திரு.வினோத் பிரசாத் இ.ஆ.ப., (சிங்காநல்லூர்), திரு.கோபால் மீனா இ.ஆ.ப., (தொண்டாமுத்தூர், கிணத்துக்கடவு), திரு.ராஜேஷ் சுகுமார் டோப்போ இ.ஆ.ப., (கோவை தெற்கு), திரு.ஸ்வரோசிஷா சோமவன்ஷி இ.ஆ.ப., (சூலூர்) திரு.ஹ்ரிஷிகேஷ் மொடக் இ.ஆ.ப.,(மேட்டுப்பாளையம், கவுண்டம்பாளைம்), மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராமதுரைமுருகன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

**பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் -2021 முன்னிட்டு தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி பல்வேறு கட்டப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதன் தொடர்ச்சியாக தேர்தல் பணிகளில் ஈடுபடும் அலுவலர்களை 10சட்டமன்ற தொகுதிகளுக்கும் பிரித்து அனுப்பும் வகையில் கணினி மூலம் குலுக்கல் (Randomization) நடத்தப்பட்டது. அதன்படி 111-மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதிக்கு 413 வாக்குச்சாவடிகள், 1984 பணியாளர்களும், 116-

சூலூர் சட்டமன்ற தொகுதிக்கு 463 வாக்குச்சாவடிகள், 2224 பணியாளர்களும், 117-கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதிக்கு 676 வாக்குச்சாவடிகள், 3244 பணியாளர்களும், 118-கோவை வடக்கு சட்டமன்ற தொகுதிக்கு 499 வாக்குச்சாவடிகள், 2396 பணியாளர்களும், 119-தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு 471 வாக்குச்சாவடிகள், 2260 பணியாளர்களும், 120-கோவை தெற்கு சட்டமன்ற தொகுதிக்கு 359 வாக்குச்சாவடிகள், 1724 பணியாளர்களும், 121-சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதிக்கு 449 வாக்குச்சாவடிகள், 2156 பணியாளர்களும், 122-கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதிக்கு 485 வாக்குச்சாவடிகள், 2328பணியாளர்களும்,123-பொள்ளாச்சி சட்டமன்ற தொகுதிக்கு 318 வாக்குச்சாவடிகள், 1528 பணியாளர்களும், 124-வால்பாறை சட்டமன்ற தொகுதிக்கு 205 வாக்குச்சாவடிகள், 984 பணியாளர்களுக்கு குலுக்கல் முறையில் பணி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும், வால்பாறை சட்டமன்ற தொகுதியில் மலைப்பிரதேசங்களில் உள்ள 89 வாக்குச்சாவடிகள் உள்ளிட்ட 428 பணியாளர்களும் என மொத்தம் 5314-முதன்மை தேர்தல் அலுவலர்கள், 5314-முதல் நிலை வாக்குப்பதிவு அலுவலர், 5314-இரண்டாம் நிலை வாக்குப்பதிவு அலுவலர்கள், 5314-மூன்றாம் நிலை தேர்தல் அலுவலர்கள் என 21256 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தேர்தல் பணியாற்ற உள்ளார்கள்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் சட்டமன்ற பொதுத்தேர்தலில் பணியாற்றும் அலுவலர்களுக்கான முதற்கட்ட பயிற்சி வகுப்பு 14.03.2021 அன்று சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்றது.

தற்போது கணினி மூலம் குலுக்கல் முறையில் பணி ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடி நிலைய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்புகள் 26.03.2021 அன்று நடைபெற உள்ளது. இந்நிலையில் வாக்குச்சாவடி நிலைய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு இன்று கணினி மூலம் சுழற்சி முறையில் பணி ஒதுக்கீடு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியாளர்கள் இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்புகளில் தவறாது கலந்து கொள்ள வேண்டும். என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**